**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்- 1, கரூர்.**

**முன்னிலை** :திருமதி.க.அம்பிகா, பி.ஏ, பி.எல்.,
நீதித்துறை நடுவர் எண்-1, கரூர்.

2023-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 16-ம் நாள் திங்கள் கிழமை

**ஆண்டுபட்டிகை வழக்கு எண்.698/2023**

அரசுக்காக
காவல் உதவி ஆய்வாளர்,
கரூர் நகர காவல் நிலையம்.
(காவல்நிலைய குற்ற எண். 1550/2021). ... முறையிடுபவர்.

**.../ எதிர்/...**

சந்திரலேகாக (எ) சுமதி,
த/பெ. பாலகிருஷ்ணன் ... எதிரி.

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தில் 02.08.2023-ம் தேதியன்று கோப்பில் எடுக்கப்பட்டு, அரசு தரப்பில் அரசு வழக்கறிஞர்-நிலை-2 அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் எதிரி தாமாக முன்னிலையாகியும் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்து வந்து, இறுதியாக இன்று விசாரணைக்கு வரப்பட்டு, இந்நீதிமன்றம் வழங்கும்,

**தீர்ப்புரை**

கடந்த 22.10.2021- ம் தேதி 10.15 மணிக்கு காயம் பட்ட வாதியானவர் ஈரோடு to கரூர் ஆத்தூர் பிரிவுக்கு மேற்புறம் உள்ள பிரியா ஹோண்ட் லூம் கம்பெனி அருகில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி TN 47 A 6267 என்ற நம்பர் உள்ள TVS Pleasure மோட்டார் சைக்கிளை ஓட்டிச்சென்ற போது, அதே ரோட்டில் எதிர் திசையில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி TN 47 BY 3040 என்ற நம்பர் உள்ள Okinawa Electric Scooter மோட்டார் சைக்கிளை எதிரியான நீவிர் அதிகவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டிவந்து எந்தவித சைகையும் செய்யாமல் வலது புறமாக திரும்பி வாதி ஓட்டிச்சென்ற மோட்டார் சைக்கிள் மீது மோதியதில், வாதிக்கு வலது நெற்றி, வலது, இடது கால் முட்டி, தலை ஆகீய இடங்களில் கொடுங்காயத்தை ஏற்படுத்திய செய்கைக்கு கரூர் நகர காவல் உதவி ஆய்வாளர் எதிரி மீது ச/பி.279, 338 இதச-ன் கீழ் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. எதிரி நீதிமன்றத்தில் ஆஜரானதும் இவ்வழக்காவணங்களின் நகல்கள் யாவும் எதிரிக்கு குவிமுச பிரிவு 207 ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது. எதிரி மீது இதச பிரிவு-279, 338 -ன் -இன் கீழ் குற்றச்சாரம்சம் எடுத்துக் கூறி வினவிய போது எதிரி குற்றத்தை தன்னிச்சையாக ஒத்துக்கொண்டுள்ளார்.

3. எதிரியின் தன்னிச்சையான குற்ற ஒப்புதலைக் கருத்தில் கொண்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்த வகையிலும் எதிரி மீதான இதச பிரிவு-279, 338 -ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பால் நிரூபிக்கப்பட்டுவிட்டதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

4. முடிவாக எதிரி இதச பிரிவு-279, 338 இன் கீழ் குற்றவாளி என்று தீர்மானித்து அவருக்கு வழங்கப்படவிருக்கும் தண்டனை குறித்து வினவியபோது எதிரி குற்றத்தை ஒப்புக் கொள்கிறேன் எனவும் தன்னை விடுதலை செய்யுமாறும் வேண்டினார்.

5. முடிவில், எதிரியின் பதிலைக் கருத்தில் கொண்டு எதிரியின் மீது அரசுத்தரப்பில் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டான இதச பிரிவு-279, 338 -ன் கீழான குற்றத்தை சந்தேகத்திற்கு அப்பாற்ப்பட்டு நிருப்பிக்கப்பட்டுள்ளது என முடிவு செய்து எதிரிக்கு இதச 279 பிரிவின் கீழான குற்றத்திற்கு அபராதம் ரூ.1000/- விதித்தும் மற்றும் இதச 338 பிரிவின் கீழான குற்றத்திற்கு அபராதம் ரூ.1000/- விதித்தும் அபராதம் கட்டத்தவறினால் 1 வாரம் மெய்காவல் சிறைத்தண்டனை விதித்து குவிமுச பிரிவு-255(2)-ன் கீழ் இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. மொத்த அபராதம் தொகை ரூ.2000/- .

6. இவ்வழக்கில் சொத்து ஏதும் தாக்கல் இல்லை.

இத்தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, இன்று 2023- ம் ஆண்டு அக்டோபர் மாதம் 16 -ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ஒ/ப.க.அம்பிகா, பி.ஏ, பி.எல்.,
**நீதித்துறை நடுவர் எண்.1,**
**கரூர்.**